தூத்துக்குடியில் 71,000 டன் நிலக்கரியைக் காணவில்லை

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி

சென்னை, செப்.7: தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் 71,000 டன் நிலக்கரி காணாமல் போய் உள்ளதாக மின்சாரத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி கூறினார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை எரிசக்தி துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பேசியது:

வடசென்னை எண்ணூர் அனல் மின்நிலையத்தில் ஆய்வு செய்தபோது 2.38 லட்சம் டன் நிலக்கரி பதிவேட்டுக்கும் இருப்புக்கும் குறைவு ஏற்பட்டது. இது தொடர்பாக அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் தங்கமணி பேட்டி கொடுத்திருந்தார். நிலக்கரி குறைவு குறித்து ஏற்கெனவே நாங்கள் கண்டுபிடித்தோம். அதைதான் அமைச்சர் சொல்கிறார் என்று கூறினார்.

என்னிடம் ஒரே கேள்விதான் உள்ளது. நிலக்கரி காணாமல் போனது குறித்து விசாரிக்கஎந்தத்தேதியில் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் நகலை வெளியிடுங்கள் என்றுதான் கேட்கிறேன். 2 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்ததாகக் கூறினார். அவர்களின் ஆய்வு அறிக்கை என்ன கூறியது என்று சொல்லுங்கள். அந்த ஆய்வு அறிக்கையைத் துறையில் தேடிப் பார்த்தேன். அப்படியொரு அறிக்கையே இல்லை. மே 2-இல் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை. அந்தக் குழுவை ஏப்ரல் 28-இல் போட்டுள்ளனர். ஒருநாள் கூட அந்தக் குழு எங்கும் செல்லவில்லை. ஆய்வும் செய்யவில்லை என்பதுதான் உண்மை.

புதிய ஆட்சி அமைந்த பிறகு முதல்வரின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு ஆகஸ்ட் 2-இல் குழு அமைக்கப்பட்டு, ஆகஸ்ட் 6-இல் ஆய்வு செய்ததில்தான் 2.38 லட்சம் டன் நிலக்கரி காணாமல் போயிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் ஆய்வு செய்தனர். தூத்துக்குடியில் 71,867 டன் நிலக்கரியைக் காணவில்லை. பதிவேட்டில் இருக்கிறது. ஆனால், அந்த நிலக்கரியையும் காணவில்லை. வருங்காலங்களில் இதுபோன்ற தவறுகள் இருக்கக் கூடாது. ஆய்வுக்குழுவின் அறிக்கைக்குப் பிறகு அதை சீரமைப்பதற்கான நடவடிக்கையை எடுப்போம் என்றார் அமைச்சர்.

அதிமுக ஆட்சியில் கோ-ஆப்டெக்ஸில் ரூ.13 கோடி நஷ்டம்

அமைச்சர் ஆர்.காந்தி

சென்னை, செப். 7: அதிமுக ஆட்சியில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் இரண்டு நிதியாண்டுகளில் மட்டும் ரூ.13 கோடி அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டதாக அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை இது குறித்த விவாதத்தை அதிமுக உறுப்பினர் ஓ.எஸ்.மணியன் தொடக்கி வைத்தார். அதன் விவரம்:

ஓ.எஸ்.மணியன்: அதிமுக ஆட்சியில் உதவாத துணிகளை வாங்கி வைத்து அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தியதாக கைத்தறித் துறை அமைச்சர் குற்றம் சாட்டியிருந்தார். அதிமுக ஆட்சியில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு ரூ.14.82 கோடி லாபம் ஏற்பட்டது.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு: உதவாத துணிகள் என்பதற்குப் பதிலாக, தரமில்லாத துணிகளை வாங்கியதாக மாற்றிக் கொள்ளலாம்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி: கைத்தறித் துறை அமைச்சர் பதிலளிக்கும் போது, அதிமுக ஆட்சிக் காலத்தில் கோ-ஆப்டெக்ஸில் உதவாத துணிகள் வாங்கப்பட்டதாகக் கூறினார். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிடம் இருந்தே துணிகள் பெறப்பட்டன. எனவே, அந்தத் துணிகளை உற்பத்தி செய்து கொடுத்த நெசவாளர்களை கொச்சைப்படுத்துவது சரியல்ல. அதுபோன்று பேசுவதன் மூலம், கோ-ஆப்டெக்ஸில் துணிகளை வாங்க மக்கள் மத்தியில் அச்சம் ஏற்படும்.

அவை முன்னவர் துரைமுருகன்: கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு வாங்கிய துணிகள் தரம் குறைந்ததாக இருந்தது என்றே அமைச்சர் கூறினார். அந்தத் துணிகள் விற்கவில்லை. தரமில்லாத துணிகளை வாங்கி விட்டார்கள். வாங்கியது விற்கவில்லை. அதற்கு விளம்பரம் போட்டார்கள். அதற்குச் செலவு ரூ.4 கோடி. எனவே, அமைச்சர் சொன்னதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி: கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காகவே கோ-ஆப்டெக்ஸ் தொடங்கப்பட்டது. அதனைப் பற்றி தவறாகப் பேசும் போது மக்கள் துணியை வாங்க அச்சப்படுவர். கரோனா நோய்த்தொற்று காலத்தில் நெசவாளர்கள் பயன்பெற ரூ.340 கோடிக்கு மானியம் வழங்கப்பட்டது. கைத்தறி நெசவாளர்களின் துணிகள் தேங்காமல் இருக்கவே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. அதில் குற்றம் கண்டுபிடித்துப் பேசும் போது அந்த நிறுவனம் பற்றி பத்திரிகைகளில் வேறு விதமாக செய்தி வரும்.

அவை முன்னவர் துரைமுருகன்: கோ-ஆப்டெக்ஸ் நல்ல நிறுவனம்தான். தவறாக வாங்கி விட்டோம் எனச் சொல்ல வேண்டியதுதான். கூட்டுறவு நிறுவனங்களில் வாங்கினாலோ அவை அனைத்தும் தரமானதாகத்தான் இருக்குமா?. தரம் குறைந்ததாக இருக்காது. நம்மிடமே சில நேரங்களில் தரம் குறைந்து போய் விடும். ஒரு சவால் விடுகிறேன். உங்கள் ஆட்சியைவிட எங்களது ஆட்சியில் கோ-ஆப்டெக்ஸ் வளமான நிறுவனமாக இயங்கும்.

கைத்தறித் துறை அமைச்சர் காந்தி: கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் போட்டு தரமில்லாத துணிகளை வாங்கினார்கள். இதன் மூலம், 2016-17-ஆம் நிதியாண்டில் ரூ.7 கோடியும், 2017-18-ஆம் ஆண்டில் ரூ.6 கோடியும் நஷ்டம் ஏற்பட்டது. அதற்கான தணிக்கை அறிக்கை எனது கையில் உள்ளது. இது குறித்து, குழு அமைத்து விசாரணை நடத்தக் கூறியுள்ளோம்.

பத்திரிகையாளர்களுக்கு நலவாரியம்–விருது

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவிப்பு

சென்னை, செப். 7: பத்திரிகையாளர்களுக்கு நல வாரியம் மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி பெயரில் விருது அளிக்கப்படும் என்று செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்தார்.

செய்தி மற்றும் விளம்பரத் துறை மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதங்களுக்கு பதிலளித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்புகள்:

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த பத்திரிகையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும். இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி ரூ.3 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும். பத்திரிகையாளர்களின் பணிகளை மேம்படுத்த பயிற்சிகள் அளிக்கப்படும்.

இளம் பத்திரிகையாளர்கள் இதழியல் துறையில் உயர் கல்வி படிக்கவும், பயிற்சி பெறவும் நிதியுதவி அளிக்கப்படும். சிறந்த இதழியலாளருக்கு கலைஞர் எழுதுகோல் விருது அளிக்கப்படும். இந்த விருது ரூ.5 லட்சம் பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழ் அடங்கியது என அமைச்சர் சாமிநாதன் அறிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் முதன்மை மாவட்ட நீதிமன்றமாக மாற்றியமைக்கப்படும்

சென்னை, செப்.7: காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றியமைக்கப்படும் என்று சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவித்தார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை நீதி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட்ட அறிவிப்புகள்:

காஞ்சிபுரத்தில் தற்போது இயங்கி வரும் மாவட்ட நீதிமன்றம் எண் 2, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றமாக மாற்றி அமைக்கப்படும். மயிலாடுதுறை மற்றும் திருப்பத்தூரில் இயங்கி வரும் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் மாவட்ட அமர்வு நீதிமன்றங்களாக மாற்றி அமைக்கப்படும்.

அருப்புக்கோட்டையில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும். கள்ளக்குறிச்சியில் ஒரு முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

தென்காசி, ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், மயிலாடுதுறை மற்றும் திருப்பத்தூரில் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்கப்படும்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, திருவண்ணாமலை மாவட்டம் போளூர் ஆகிய இடங்களில் அனைத்து வசதிகளுடன் சார்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்குரைஞர்களுக்கான கூடுதல் வளாக கட்டடம் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.4.28 கோடி செலவில் கட்டப்படும்.

பேரவைத் தலைவர் குறித்த பேச்சு: அதிமுக உறுப்பினரை திரும்பப் பெற வைத்த துரைமுருகன்

சென்னை, செப்.7: பேரவைத் தலைவர் அப்பாவுக்கு எதிரான அதிமுக உறுப்பினர் தளவாய் சுந்தரத்தின் அவதூறு பேச்சை அவை முன்னவர் துரைமுருகன் திரும்பப் பெற வைத்தார்.

சட்டப்பேரவையில் செவ்வாய்க்கிழமை எரிசக்தி துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் அதிமுக உறுப்பினர் தளவாய் சுந்தரம் (கன்னியாகுமரி) பேசியது:

பேரவைத் தலைவரின் இருக்கை இந்தியாவில் 4 இடங்களில்தான் உள்ளது. அதில் நமது சட்டப்பேரவையும் ஒன்று. இந்த இருக்கையில் நீங்கள் (அப்பாவு) அமர்ந்திருப்பது எங்களுக்கு எல்லாம் மகிழ்ச்சி. தென்மாவட்டங்களில் இருந்து சட்டப்பேரவைத் தலைவர்களாக செல்லப்பாண்டியன், பி.எச்.பாண்டியன், ஆவுடையப்பன் ஆகியோருக்குப் பிறகு

நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், ஒரு நாளும் அதிமுக உறுப்பினர்கள் உங்கள் இருக்கையின் பக்கம் வரமாட்டோம். இருக்கையைத் தொடமாட்டோம் என்று கூறி சட்டப்பேரவையில் நடந்த பழைய சம்பவத்தையும் குறிப்பிட்டார்.

தளவாய்சுந்தரத்தின்பேச்சுக்கு பேரவைத் தலைவர் அப்பாவு நன்றியும் கூறினார். ஆனால், அவை நடவடிக்கைகள் சிறிது நேரம் சென்ற பிறகு அவை முன்னவர் துரைமுருகன் எழுந்து, தளவாய் சுந்தரம் பழைய சம்பவத்தைக் குறிப்பிட்டு, இப்படிக் கூறுவது அவையை மீறியதாகும். தளவாய் சுந்தரம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் அவருக்கு உரிமை மீறல் நோட்டீஸ் அளிக்கப்படும் என்றார்.

தளவாய் சுந்தரம்: இது போன்ற நிகழ்வு நடந்தது. இனி நடக்காது என்றுதான் கூறினேன் என்றார்.

ஆனால், அதை துரைமுருகன் ஏற்கவில்லை. மறைமுகமாக பேரவைத் தலைவரை மிரட்டுவதுபோல இருக்கிறது. நீங்கள் பேசியது அவதூறானது. அதை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார். பிறகு தளவாய் சுந்தரம் அந்த வார்த்தைகளை திரும்பப் பெற்றுக்கொண்டார்.

காரைக்குடியில் புதிய அரசு சட்டக் கல்லூரி

சென்னை, செப்.7: காரைக்குடியில் புதிய அரசு சட்டக்கல்லூரி தொடங்கப்படும் என்று சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவித்தார்.

சட்டத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து அமைச்சர் எஸ்.ரகுபதி வெளியிட்ட அறிவிப்புகள்: சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் புதிய அரசு சட்டக் கல்லூரியானது 5 ஆண்டு மற்றும் 3 ஆண்டு சட்டப்படிப்பில் முதலாம் ஆண்டில் தலா 80 மாணவர்களுடன் 2022-23-ஆம் கல்வியாண்டில் தொடங்கப்படும்.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் இணையவெளி சட்டம் மற்றும் நீதி என்ற புதிய பாடப்பிரிவில் முதுநிலை சட்டப்படிப்பு ரூ.1.18 கோடி செலவில் தொடங்கப்படும்.

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 240 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையம் நிறுவப்படும் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003
இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2021-2022

நூற்றாண்டு பழமைமிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த வேளாண் கல்வி கற்பிப்பதில் ஒரு முதன்மை நிறுவனமாகும். வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த உயர்கல்வி படிப்புகளை வழங்குவது, வேளாண்மை ஆராய்ச்சிகளை மேற்கொள்வது, இந்திய மற்றும் உலக அளவில் சிறந்து விளங்கும் பல்கலைக்கழகங்களுடனும், ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் இணைந்து தரமான கல்வியை வழங்குவது இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும்.

இப்பல்கலைக்கழகம் 2021–2022 ஆம் கல்வியாண்டில், கீழ்க்காணும் 11 பட்டப்படிப்புகளை, 18 உறுப்பு மற்றும் 28 இணைப்புக் கல்லூரிகள் மூலம் வழங்குகிறது.

1) இளமறிவியல் (*மேதமை) வேளாண்மை
2) இளமறிவியல் (மேதமை) வேளாண்மை (தமிழ் வழிக்கல்வி)
3) இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை
4) இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை (தமிழ் வழிக்கல்வி)
5) இளமறிவியல் (மேதமை) வனவியல்
6) இளமறிவியல் (மேதமை) உணவு, ஊட்டச்சத்தியல் மற்றும் உணவு முறையியல்
7) இளம் தொழில் நுட்பம் (வேளாண்மைப் பொறியியல்)
8) இளம் தொழில் நுட்பம் (உயிரித் தொழில் நுட்பம்)
9) இளம் தொழில் நுட்பம் (ஆற்றல் மற்றும் சுற்றுச் சூழல் பொறியியல்)
10) இளம் தொழில் நுட்பம் (உணவுத் தொழில் நுட்பம்)
11) இளமறிவியல் (மேதமை) வேளாண் வணிக மேலாண்மை

*மேதமை – Honours

தகுதி : விண்ணப்பதாரர்கள் i) மேல் நிலைத் தேர்வில் தகவல் கையேட்டில் பரிந்துரைக்கப்பட்ட பாடங்களை பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ii) 01.07.2021 அன்று 21 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். (பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பு இல்லை).

iii) **தமிழ்நாட்டினை இருப்பிடமாக** கொண்டு இருக்க வேண்டும். மேலும் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பினை இதர மாநிலங்களில் பயின்ற விண்ணப்பதாரர்கள், விண்ணப்ப தகவல் கையேட்டில் உள்ள **நிரந்தர இருப்பிட சான்றிதழை (Nativity Certificate)** தகுந்த அதிகாரியிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். மாணவர் சேர்க்கை குறித்த விரிவான தகவல்களை பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் கையேட்டில் (2021–2022) பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

விண்ணப்பிக்கும் முறை : விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகத்தின் https://tnau.ac.in/ugadmission என்ற இணையதளத்திலுள்ள விண்ணப்பத்தினை இணையதள வாயிலாக மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பங்கள் வினியோகிக்கப்படமாட்டாது.

இணையதள வாயிலாக மட்டுமே கலந்தாய்வு நடைபெறும்.

முக்கிய தேதிகள் :

வ.எண்	விவரம்	தேதி
1.	இணையதளத்தில் விண்ணப்பம் பதிவேற்றம் செய்ய துவங்கும் நாள்	08.09.2021
2.	இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவேற்றம் செய்ய கடைசி நாள்	07.10.2021
3.	தரவரிசை பட்டியல் வெளியீடு	18.10.2021

விண்ணப்பக்கட்டணம் : இதர பிரிவினருக்கு ரூ.600/–
SC/SCA/ST பிரிவினருக்கு ரூ.300/–
விண்ணப்பக் கட்டணத்தினை இணையதள வாயிலாக விண்ணப்ப படிவத்தில் உள்ள வழிகாட்டி (link) வழியாக செலுத்தலாம்.

விண்ணப்ப இணையதளம் : https://tnau.ac.in/ugadmission

மேலும் விவரங்களுக்கு:
தொலைபேசி : 0422-6611345 மற்றும் 6611346
மின்னஞ்சல் : ugadmissions@tnau.ac.in

முதன்மையர் (வேளாண்மை) மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை)

செ.ம.தொ.இ/809/வளாககல/2021

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

refex ரிஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11வது தளம், பார்ஸ்கான் பிபூச்சரா ஐடி பார்க், புதிய எண்.10/2, பழைய எண்.56L, வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை 600 017 | CIN: L45200TN 2002PLC049601
Tel.: +91-44-43405950 | E Mail: admin@refex.co.in | Website: www.refex.co.in

19வது வருடாந்திர பொதுக் கூட்டம், புத்தகம் மூடல் மற்றும் மின்னணு வாக்களிப்பு தகவல் அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013 மற்றும் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம் (''MCA'') (''கூட்டாக எம்சிஏ சுற்றறிக்கைகள் என குறிப்பிடப்படும்'') வெளியிட்ட 8 ஏப்ரல், 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.14/2020, 13 ஏப்ரல், 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.17/2020, 5 மே, 2020 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.20/2020 மற்றும் 13 ஜனவரி, 2021 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.02/2021 மற்றும் செக்யூரிட்டிஸ் எக்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியாவின் (கூட்டாக செபி சுற்றறிக்கைகள் என குறிப்பிடப்படும்) 12 மே, 2020 மற்றும் 15 ஜனவரி, 2021 தேதியிட்ட சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் கீழ் 2 செப்டம்பர், 2021 தேதியிட்ட வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அலுவல் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்ள உறுப்பினர்கள் பொதுவாக ஒரு இடத்தில் நேரடியாக கூடாமல், **சென்ட்ரல் டெபாசிட்டரிஸ் சர்வீசஸ் லிமிடெட் (CDSL)** வழங்கும் வசதி மூலம் **கம்பெனியின் பத்தொன்பதாவது வருடாந்திர பொதுக்கூட்டம் வியாழக்கிழமை, 30 செப்டம்பர், 2021 அன்று காலை 11.00 மணிக்கு** (இந்திய நேரப்படி) காணொலி காட்சி (VC)/பிற ஆடியோ காட்சி முறை (OAVM) மூலம் நடைபெறும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட எம்சிஏ மற்றும் செபி சுற்றறிக்கைகளுக்கு இணங்க, கூட்டத்தில் பரிவர்த்தனை செய்யப்பட உள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல் குறித்த கூட்ட அறிவிப்புடன் 2020-21-ம் நிதியாண்டிற்கான கம்பெனியின் வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை 3 செப்டம்பர், 2021, வெள்ளிக்கிழமை அன்று வணிக நேரத்தின் இறுதி நேரத்திற்குள் உறுப்பினர்கள்/வைப்பாளர்கள் பதிவேடுகளில் பெயர் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு 7 செப்டம்பர், 2021 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கம்பெனி/ வைப்புத்தொகை பங்கேற்பாளர்(கள்) உடன் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு இந்த அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை இதுவரை பதிவு செய்யாத பங்குதாரர்கள், அந்தந்த வைப்புத்தொகை பங்கேற்பாளர்களை அணுகி மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொண்டு அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையை திரும்ப மின்னஞ்சல் மூலம் அனுப்புவதற்கான கோரிக்கையை cscompliance@refex.co.in / investor@cameoindia.com க்கு எழுதலாம், மேலும் கம்பெனி அதற்கு பதிலளிக்கும்.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கை கம்பெனியின் இணையதளம் http://www.refex.co.in இல் கிடைக்கிறது. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் வருடாந்திர அறிக்கையைப் பெறாத உறுப்பினர்கள் அதை கம்பெனியின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது மேற்கூறிய மின்னஞ்சல் முகவரி அல்லது கம்பெனியின் பதிவு அலுவலக முகவரியில் கம்பெனியின் செயலாளருக்கு எழுதி அதன் மூலம் நகலை கோரலாம். வருடாந்திர பொதுக் கூட்டத்தில் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டிய அலுவல்கள் தொடர்பான எந்தவொரு ஆவணத்தையும் ஆய்வு செய்ய, பங்குதாரர்கள் cscompliance@refex.co.inக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் மற்றும் கம்பெனி அதற்கு தகுந்த முறையில் பதிலளிக்கும்.

மேற்கண்ட சுற்றறிக்கைகளின்படி கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்களிப்பு, காணொலி காட்சி (VC) மற்றும் மின்னணு வாக்களிப்பு ஆகியவற்றுக்கான வசதிகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான சென்ட்ரல் டெபாசிட்டரிஸ் சர்வீசஸ் லிமிடெட் (CDSL) சேவையை கம்பெனி ஈடுபடுத்தியுள்ளது. சென்ட்ரல் டெபாசிட்டரிஸ் சர்வீசஸ் லிமிடெட் (CDSL) (தொலைதூர மின்னணு வாக்களிப்பு) வழங்கும் மின்னணு வாக்களிப்பு முறையில் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள ஒவ்வொரு அலுவல்கள் மீதும் **கட் ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, 17 செப்டம்பர், 2021 அன்று** காகித வடிவில் அல்லது மின்னணு வடிவில் பங்குகளை வைத்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னணு வாக்களிப்பு வசதியை கம்பெனி வழங்குகிறது என்று செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015, ஒழுங்குமுறை 44 மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள், 2014 விதி 20 மற்றும் பொதுக் கூட்டங்களில் செயலக தரநிலைகள் 2 ஆகியவற்றின் கீழ் உறுப்பினர்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. மின்னணு வாக்களிப்புக்கான விரிவான நடைமுறை/ அறிவுறுத்தல்கள் பத்தொன்பதாம் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் உள்ளன.

பதிவுத் தேதியான **17 செப்டம்பர், 2021** வெள்ளிக்கிழமை அன்று உறுப்பினர்கள் பதிவேடு/பலன்பெறும் உரிமையாளர்கள் பட்டியலில் பெயர் இடம் பெற்றுள்ள நபர்களுக்கு வருடாந்திர பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் அங்கீகரித்தால், குழு பரிந்துரைத்த, 2020–21ம் நிதியாண்டுக்கான இறுதி ஈவுத்தொகையைப் பெற உரிமை உண்டு,

அனைத்து உறுப்பினர்களும் இதன்மூலம் தெரிவிப்பதாவது:

1. பத்தொன்பதாவது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் 2020–21 வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை அனுப்பும் பணியை கம்பெனி செவ்வாய்கிழமை, 7 செப்டம்பர், 2021 அன்று நிறைவு செய்துள்ளது.
2. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் மீது மின்னணு வாக்களிப்பு முறையில் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படும்.
3. தொலைதூர மின்னணு வாக்களிப்பு திங்கட்கிழமை, 27 செப்டம்பர், 2021 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவங்குகிறது.
4. தொலைதூர மின்னணு வாக்களிப்பு புதன்கிழமை, 29 செப்டம்பர், 2021 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) நிறைவுபெறுகிறது.
5. 29 செப்டம்பர், 2021 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.
6. வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்கள் மீது மின்னணு வழிகளில் வாக்களிக்கும் தகுதியை நிர்ணயிப்பதற்கான கட்ஆப் தேதி 17 செப்டம்பர், 2021 ஆகும்.
7. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை வாங்கி உறுப்பினராகும் எந்தவொரு நபரும் மற்றும் **கட் ஆப் தேதியான 17 செப்டம்பர், 2021** அன்று கம்பெனியின் பங்குகளை வைத்துள்ளவர்களும் cscompliance@refex.co.in அல்லது www.evotingindia.com அல்லது investor@cameoindia.com அல்லது helpdesk.evoting@cdslindia.comக்கு கோரிக்கை அனுப்பி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்ட் ஆகியவற்றை பெறலாம். இருப்பினும், உறுப்பினர் ஏற்கனவே CDSL உடன் தொலைதூர மின்னணு வாக்களிப்பிற்காக பதிவுசெய்திருந்தால், அந்த பதிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை வாக்களிப்பதற்கு அவர் பயன்படுத்தலாம்.
8. தொலைதூர மின்னணு வாக்களிப்பு நடைமுறையின் ஆராய்வாளராக திரு. ஆர். முத்துகிருஷ்ணன், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர் உறுப்பினர் எண். எப்சிஎஸ்–6675 அவர்களை கம்பெனி நியமித்துள்ளது. வாக்களிப்பின் முடிவுகள் நிர்ணயிக்கப்பட்ட மற்றும் தொடர்புடைய விதிகளின் கீழ் அறிவிக்கப்படும், மேலும் அது கம்பெனியின் இணையதளத்திலும் வெளியிடப்படும்.
9. VC/OAVM வசதி மூலம் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் மற்றும் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் தீர்மானங்களில் வாக்களிக்கதகுதிவர்கள், வருடாந்திர பொதுக் கூட்டத்தின்போது மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வாக்களிக்க தகுதி உடையவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு எந்தவித தடையும் இல்லை. VC/OAVM மூலம் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான விரிவான அறிவுறுத்தல்கள் வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.
10. வருடாந்திர பொதுக் கூட்டத்துக்கு முன்னர் தொலைதூர மின்னணு வாக்களிப்பதன் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம், ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை.
11. **கட் ஆப் தேதியான 17 செப்டம்பர்,** 2021 அன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது வைப்பாளர்களால் பராமரிக்கப்படும் ப